27—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***25997—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாளில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள் கொண்ட நெஞ்சத்தால் அன்பை ஊட்டி, இருள்சூழ்ந்த இதயத்தில் ஒளியை ஏற்றி, இருண்டு கிடந்த தமிழகத்திற்கு வெளிச்சம் தந்து, புதுமை படைத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் இம்மியளவும் மாறிடாமல், அம்மா அவர்களின் அரசை வழிநடத்தும் வலிமையான முதல்வர், எளிமையான முதல்வர், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, அவருக்குத் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் O.P.S. அவர்களையும் வணங்கி, தங்களின் அனுமதியோடு திருத்திய பதிலை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில், திருப்பனந்தாள் அருகிலுள்ள வாண்டையார் இருப்பு என்ற கிராமத்தில் TJR 940 வாண்டையார் இருப்பு, திருப்பனந்தாள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் புதிய சங்கம் 6–6–2019 அன்று புதிதாகப் பதிவு செய்யப்பட்டு, தற்போது 72 லிட்டர் பால் உற்பத்தியுடன் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

2019 ஜூலை 3]

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இருமொழிக் கொள்கைக்கு உயிரூட்டக் கூடியவகையிலும், இரயில்வே துறையில் இந்தியைத் திணித்தபோது அதை எதிர்த்து, இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் இந்தியாவில் தலைநகர் சென்னை, தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்றுத் தந்த சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற திருவிடைமருதூர் தொகுதியை உள்ளடங்கிய பகுதிகளில் இதுவரை உற்பத்தி செய்த பாலை கும்பகோணத்தில் இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில்தான் விற்பனை செய்து வருகிறார்கள். கும்பகோணத்தில் இருக்கக்கூடிய பால் உற்பத்தியாளர்கள் சங்கம், கும்பகோணம் நகரம், கும்பகோணம் ஒன்றியம், திருப்பனந்தாள் ஒன்றியம், திருவிடைமருதூர் ஒன்றியம், பாபநாசம் ஒன்றியம், வலங்கைமான் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் அனைவரும் கும்பகோணத்திற்குதான் பாலை எடுத்துச் சென்று விற்பனை செய்யக்கூடிய நிலை உள்ளது. நாகை மாவட்டத்தில் மயிலாடுதுறை, திருவாரூர் மாவட்டத்தில் நீடாமங்கலம், அரியலூர் மாவட்டத்தில் தா. பழூர் மற்றும் தஞ்சை என நான்கு ஊர்களுக்கும் மையப் பகுதியாக கும்பகோணம் இருக்கிறது.

மழை போன்ற இயற்கை இடர்பாடுகளின்போதும் 20 கிலோ மீட்டருக்கு மேலாக பயணித்து பாலினை விற்பனைக்கு எடுத்துச் செல்லும்போதும் பணியாளர்களுக்கு இடர்பாடு ஏற்படுகிறது. என்னுடைய திருவிடைமருதூர் தொகுதியில் 5,000–க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் இருக்கின்ற காரணத்தால், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தை தலைமையிடமாக இருக்கக்கூடிய திருவிடைமருதூரில், அதாவது தாலுகா, நகர், ஒன்றியத் தலைநகர், தொகுதியின் தலைநகர் என்று சொல்லக்கூடிய திருவிடைமருதூரிலோ அல்லது திருப்பனந்தாளிலோ இந்த அரசு அமைத்துத்தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் சார்ந்திருக்கின்ற திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாளில் பால் உற்பத்தியாளர்கள் தலைமை அலுவலகத்தை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். அந்த அளவிற்கு அதிகமான பால் உற்பத்தி அந்தப் பகுதியில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற பகுதியில் அதிகமான பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் உருவாகி, பால் உற்பத்தி அதிகமாகும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்தப் பகுதியில், பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும்விதமாக ஒரு* Chilling Centre *அல்லது* BMC–*ஐ மாண்புமிகு தமிழக முதல்வர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு அமைத்துத் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் பொது மக்களுக்குத் தேவையான பாலின் அளவு 25,000 லிட்டருக்கும் மேலாக உள்ளது. ஆனால், கும்பகோணம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பாலின் வரத்து சுமார் 6,000 லிட்டர் முதல் 7,000 லிட்டர் வரைதான். அதற்கு என்ன காரணம் என்று சொன்னால்,* Amirthaa, Arokya, Thirumala, VKN, Vijay, Chamber *என்று பல மாநிலங்களில் உற்பத்தியாகின்ற பாலினை பொது மக்கள் வாங்கிப் பயன்படுத்துகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இதன்மூலம் நான் அரசுக்கு வைக்கின்ற கோரிக்கை என்னவென்றால், பால் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும்; பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் பணியாற்றும் பணியாளர்கள் நீண்ட தூரம் சென்று கும்பகோணத்தில் பால் தருவதை தடுத்திட வேண்டும். அதன்மூலம் தனியாருக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு, அரசுக்கும் வருமானம் கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து திருவிடைமருதூரில் நான் சொன்ன அந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினை அமைப்பதன்மூலம் உற்பத்தியாளர்கள் அதிகரித்து,*

2019 ஜூலை 3]

பால் உற்பத்தியின் அளவும் அதிகரிக்கும். எனவே, அதற்கு உதவ வேண்டும் என்ற கோரிக்கையை, இந்த வேண்டுகோளை தங்களின்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 13 தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் திருப்பனந்தாள் ஒன்றியத்தில் மட்டும் 5 சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த 5 சங்கங்களிலிருந்து சுமார் 291 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, உள்ளூரில் சுமார் 36 லிட்டர் பால் விற்பனை செய்ததுபோக, 255 லிட்டர் பால் தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, உற்பத்தியாகும் பாலினை சேகரிக்கின்ற ஓர் BMC அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்குத் தேவையான உதவிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செய்வாரேயானால், அதிகமான பால் உற்பத்தியாளர்களை அவர் சேர்ப்பாரேயானால், அந்தப் பகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் (BMC) அமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அனுமதியைப் பெற்று, அமைத்துக் கொடுப்பேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

தொழிற்பேட்டை

***6214—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—